රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතන<br>தொலைபேசி:<br>Telephone | **(94) 011- 2696211-13**<br>**(94) 011- 2166000** | ෆැක්ස්<br>தொலைநகல்:<br>Fax | **(94) 011- 2695279** | ඊ-මේල්<br>மின்னஞ்சல்:<br>E-mail | **information@pubad.gov.lk** | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்:<br>Web Site | **www.pubad.gov.lk** |
|---|---|---|---|---|---|---|---|

| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/ICTS/Annual Transfer/01/ 2025 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2024.08.01 |
|---|---|---|---|---|---|

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>இணைந்த சேவையில் வருடாந்த இடமாற்றம் – 2025</u>**

**<u>இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 உத்தியோகத்தர்களின் விபரங்களை கோருதல்</u>**

இணைந்த சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் – 2025 என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட 2022.07.29 ஆந் திகதிய இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இல. 02/2024 இன் 9.07 இன் a பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

02. அதன்படி சேவையில் இடமாற்றத்தை எதிர்பார்க்கும் வகுப்பு 3 இல் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி குறித்த Google படிவத்தினை 2022.08.31 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி அனுப்ப வேண்டும்.

https://bit.ly/3z0Tm4O

03. மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் போது உத்தியோகத்தர்களின் தகவல் தொழிநுட்ப திறமையினை அடையாளம் காண வேண்டும் என்பதால் இந்த Google படிவத்தினை பூரணப்படுத்தி உரிய திகதிக்கு அனுப்பி வைத்துள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்ற கோரிக்கை மட்டுமே இடமாற்ற சபையில் கவனத்திற் கொள்ளப்படும் என்பதை கருத்திற் கொள்ளவும்.

04. அதன்படி செயற்படுமாறு உங்களின் கீழ் உள்ள இலங்கை தகவல் , தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்களுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்